

# பாடம் 14





## ஒரு கருத்துப் பொருள்

***இயேசு உன்னை விடுவிக்கிறார்!***


## வேதாகமக் கதை

இயேசு
உன்னை
விடுவிக்கிறார்!

***இயேசு விடுவிக்கிறார் என்று கற்பிக்கும் கதையை உபயோகியுங்கள்!***


**நற்செய்தி கதைப்புத்தகம் ஆறு. பக்கம் 16-21.** *நான் விடுவிக்கப்பட்டுள்ளேன்.*

**தேவையான பொருட்கள்:** வரைகிறதற்குக் கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு எழுதுகோல், அல்லது மண் மற்றும் குச்சி, அல்லது காகிதம் மற்றும் எழுதுகோல். குழந்தைகளுக்கு வரைபடக் காகிதம் அல்லது தாள் மற்றும் எழுதுகோல், அழிப்பான்.




வரைந்து கதையைக் கூறுங்கள். ஒவ்வொரு பக்கத்தையும் வாசித்தபின், குழந்தைகளிடம் ஒரு கேள்வி கேளுங்கள்.


1, 2, 3 கதையைத் தொடங்குங்கள்…



மற்றொரு நாள், வேறு நேரம், வேறு இடம். இயேசுவும் அவரைப் பின்பற்றுபவர்களும் நதியைக் கடப்பதை என்னால் பார்க்க முடிகிறது. பன்றிகள் நதியருகில் நிற்பதை என்னால் பார்க்க முடிகிறது.




அங்கு ஒரு மனிதனை என்னால் பார்க்க முடிகிறது. அம்மனிதனில் பல தீய ஆவிகள் உள்ளன. அவனில் உள்ள பல தீய ஆவிகளிடம் இயேசு சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'இம்மனிதனிலிருந்து வெளியேறி நதியருகில் நிற்கும் பன்றிகளுக்குள் செல்லுங்கள்.' பல தீய ஆவிகள் அவனிலிருந்து வெளியேறி நதியருகில் நிற்கும் பன்றிகளுக்குள் செல்வதை என்னால் பார்க்க முடிகிறது. பன்றிகள் நதிக்குள் ஓடுவதை என்னால் பார்க்க முடிகிறது. பன்றிகள் இறந்துவிட்டன. அம்மனிதன் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் கேட்க முடிகிறது. இயேசு அம்மனிதனிடம் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'போய் எல்லா மக்களிடமும் சிருஷ்டிகரான தேவன் உனக்குச் செய்ததைச் சொல்.'




அம்மனிதன் எல்லா மக்களிடமும் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'இயேசு தீய ஆவிகளை என்னிலிருந்து வெளியேறச் சொன்னார். தீய ஆவிகள் என்னிலிருந்து வெளியேறின. இயேசு எனக்கு விடுதலை தந்திருக்கிறார்.'




இயேசுவே உலகத்தின் ஒளி. இருளைப் பின் தள்ளும் வல்லமை இயேசுவுக்கு மாத்திரமே உண்டு.

சிருஷ்டிகரான தேவன் இங்கே இருக்கிறார்!

# பாடம் 14





## செய்கைப் பாடல்

***இயேசு உன்னை விடுவிக்கிறார் என்று கற்பிக்கும் ஒரு செய்கைப்பாடலை உபயோகியுங்கள்!***

இயேசு என்ற நாமத்தில் இயேசு
என்ற  நாமத்தில்
ஜெயம் நமக்குண்டு! அல்லேலூயா
இயேசு என்ற நாமத்தில் இயேசு
என்ற  நாமத்தில்
பேய்கள் பறந்தோடும்!
இயேசு நாமத்தில் நிற்கும்போது
யார் நமக்கெதிராய் நிற்பாரோ?
இயேசு இயேசு நாமத்திலே
ஜெயம் நமக்குண்டு } 2

## பொருள் கண்டு கற்றல்

***இயேசு உன்னை விடுவிக்கிறார் என்ற கருத்தை ஒரு பொருள் அல்லது படைப்பு கொண்டு கற்றுக்கொடுங்கள்!***

தேவையான பொருட்கள்: கயிறு, கண்களைக் கட்ட துணி.

இரண்டு குழந்தைகளை உங்களுக்குதவ முன்னழையுங்கள். ஒரு குழந்தை இயேசுவைப்போல் (ஒரு குழந்தையைக் குறிப்பிடுங்கள்) நடிக்க வேண்டும். அடுத்தக் குழந்தை (அடுத்தக் குழந்தையைக் குறிப்பிட்டு) தீய ஆவிகளிடம் இருளில் தொலைந்த ஒரு மனிதனைப் போல நடிக்கப் போகிறார் என்று எல்லாக் குழந்தைகளுக்கும் விளக்குங்கள்.

தீய ஆவிகளுள்ள மனிதனைப்போல் நடிக்கும் குழந்தையைக் கயிறு வைத்துக் கட்டி, கண்களையும் கட்டி விடுங்கள். இப்படித்தான் தீய ஆவிகள் ஒரு மனிதனிடம் இருந்தால், அவன் இருளிலே சிக்கி தொலைந்துபோவான் என்று விளக்குங்கள்.

இயேசு
உன்னை
விடுவிக்கிறார்!

இயேசுவாக நடிக்கும் குழந்தையை, தீய ஆவிகளுள்ள மனிதனாக நடிக்கும் குழந்தையைக் கட்டியிருக்கும் கயிற்றையும், கண்களைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ள துணியையும் அவிழ்த்துவிடச் சொல்லுங்கள்.

விடுவிக்கப்பட்ட குழந்தை மிகுந்த சந்தோஷத்துடன் மேலும் கீழும் குதித்து, இயேசுவிற்கு நன்றி கூற வேண்டும்.

இயேசு மக்களை விடுவிக்கும்போது இப்படித்தான் இருக்கும் என்று விளக்குங்கள். இயேசுவே உலகத்தின் ஒளி, இயேசுவே இருளைப் பின்தள்ளும் வல்லமை உள்ளவர்.


# பாடம் 14

## வேத வசன மனப்பாடப் போட்டி




***இயேசு உன்னை விடுவிக்கிறார் என்று கற்பிக்கும் வசனத்தை உபயோகியுங்கள்!***

யோவான் 8:36 *'எனவே குமாரன் (இயேசு) உங்களை விடுதலை செய்தால் நீங்கள் உண்மையான விடுதலையைப் பெறுவீர்கள்.'*



படம் வார்த்தை புதிர்: ஆறு துண்டுக் காகிதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு துண்டில், 'குமாரன்' (இயேசு) என்று எழுதுங்கள். அடுத்த துண்டில், 'இயேசுவும் சிலுவையும்' வரைந்து கொள்ளுங்கள். மூன்றாம் துண்டில், 'உங்களை விடுதலை செய்தால்' என்று எழுதி, நான்காம் துண்டில், இயேசு கட்டப்பட்டிருக்கிற மனிதனை அவிழ்த்துவிடுவதுபோல் வரைந்து கொள்ளுங்கள். அடுத்த துண்டில், 'உண்மையான விடுதலையைப் பெறுவீர்கள்' என்று எழுதி, கடைசித் துண்டில் விடுதலையான மனிதனைப்போல் வரைந்து கொள்ளுங்கள்.



ஒவ்வொரு துண்டையும் குழந்தைகள் வருமுன் ஒவ்வொரு இடத்தில் ஒளித்து வையுங்கள்.

குழந்தைகளிடம் நீங்கள் ஒரு முக்கிய செய்தியைக் கண்டு பிடிக்க வேண்டும். இங்கே ஆறு துண்டுக் காகிதங்கள் செய்தியின் ஒரு பகுதியைக் கொண்டவை (அறை, வீடு, ஆலயம் அல்லது கிராம இடம்), ஒளித்து வைக்கப்பட்டுள்ளன.

1, 2, 3 மறைத்து வைக்கப்பட்டுள்ள செய்தியைக் கண்டெடுங்கள்…

6 துண்டுகளையும் குழந்தைகள் கண்டெடுத்த பின், அவர்கள் வார்த்தையையும் அதற்குரிய சித்திரத்தையும் ஒன்று சேர்க்கச் சொல்லுங்கள். குழந்தைகள் இன்னும் எழுத வாசிக்க அறியாதவர்களென்றால், நீங்கள் துண்டுகளை வாசித்து, அவைகளை ஞாபகம் கொள்ளும்படி அதற்குரிய சித்திரங்களையும் காட்டுங்கள். அந்த வார்த்தைகளையும் சித்திரங்களையும் சரியான வரிசையில் அடுக்கி வைத்து விட்டு, வேத வசனத்தை அவர்கள் மனப்பாடம் செய்து கொள்ளும் வரை சத்தமாகத் திரும்பத் திரும்பச் சொல்ல வையுங்கள்.

இயேசு
உன்னை
விடுவிக்கிறார்!


## நடைமுறை செயல்படுத்தல்

***இயேசு உன்னை விடுவிக்கிறார் என்று கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தல் ஒன்றை உபயோகியுங்கள்!***

இயேசு இருளைப் பின் தள்ளி, எல்லாத் தீய காரியங்களிலும் இருந்து நம்மை விடுவிக்கிறார். இயேசு நம் வாழ்வின் இருளைப் பின் தள்ளுகிறார். நம்மை கண்ணிபோல் பிடித்துக் கொள்ளும் தீய காரியங்களை இயேசு எடுத்துப் போடுகிறார். இயேசு நம்மை விடுவிக்கிறார்!

ஜெபம்: ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளை இயேசு தங்கள் எல்லாத் தீய காரியங்களிலுமிருந்து விடுவித்ததற்காக நன்றி ஜெபம் ஏறெடுக்கச் சொல்லுங்கள்.

# பாடம் 15





## ஒரு கருத்துப் பொருள்

*இயேசுவின் இரத்த பலி நம்மை மீட்கிறது*

இயேசுவின்
இரத்த பலி
நம்மை
மீட்கிறது

## வேதாகமக் கதை

***இயேசுவின் இரத்தபலி நம்மை மீட்கிறது என்று கற்பிக்கும் கதையை உபயோகியுங்கள்***

**நற்செய்தி கதைப் புத்தகம் ஆறு. பக்கம் 22-34.** *இயேசு விடுவிக்கிறார்.*

பக்கம் 22-34 உள்ள கதையைக் குழந்தைகளுக்கு *நற்செய்தி கதைப்புத்தகத்தில்* உள்ள சித்திரங்களைக் காண்பித்து வாசியுங்கள்.

குழந்தைகளிடம் இக்கதையைக் குறித்த கேள்விகளைக் கேளுங்கள். சரியான பதில் கூறினால் பாராட்டுங்கள். தவறான பதில் தந்தால் நன்முயற்சி ஆனால் சரியான பதில் அல்ல என்று உற்சாகப்படுத்துங்கள். சரியான பதில் சொல்லும் வரை அதே கேள்வியைக் கேளுங்கள்.

இதோ சில கேள்விகள்.

**இயேசு தமது உயிரை இரத்த பலியாகக் கொடுக்கச் சில காரணங்கள் என்ன?**

நாம் செய்த கெட்ட காரியங்களுக்காக.

நமது தண்டனையை அவர் ஏற்றுக்கொள்வதற்காக.

இருளைப் பின் தள்ள.

நம்மை என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் மீட்டுக்கொள்ள.

அவர் நம்மை நேசிப்பதினால்.


**இயேசு எப்படி இறந்தார்?**
இயேசு சிலுவையில் ஆணி அடித்துக் கொல்லப்பட்டார்.


**இயேசுவின் கல்லறை ஏன் காலியாக இருந்தது?**

இயேசு வாழ்கிறார்!

**இயேசு அவரைப் பின்பற்றுவோரை என்ன செய்யச் சொன்னார்?**
எங்குமுள்ள எல்லா மக்களிடமும்போய், நற்செய்தியைச் சொல்லுங்கள்! இயேசு உங்களை நேசிக்கிறார். இயேசு இறந்தார், ஆனாலும் உயிரோடிருக்கிறார், உங்களை என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிப்பார் என்று அறிவிக்கச் சொன்னார்.

# பாடம் 15






## செய்கைப் பாடல்

***இயேசுவின் இரத்தபலி நம்மை மீட்கிறது என்று கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடலை உபயோகியுங்கள்***

இரத்தம் ஜெயம் இரத்தம் ஜெயம்
கல்வாரி இயேசுவின் இரத்தம் ஜெயம்
மீட்பர் இயேசுவின் இரத்தம் ஜெயம் } 2

1. எதிரியை துரத்திடும் இரத்தம் ஜெயம் } 2
எந்நாளும் சுகம் தரும் இரத்தம் ஜெயம்
அதிகாரம் தந்திடும் இரத்தம் ஜெயம் } 2
அதிசயம் செய்திடும் இரத்தம் ஜெயம்




2. பாவங்கள் போக்கிடும் இரத்தம் ஜெயம் } 2
பரிசுத்தமாக்கிடும் இரத்தம் ஜெயம்
சாபங்கள் நீக்கிடும் இரத்தம் ஜெயம் } 2
சமாதானம் தந்திடும் இரத்தம் ஜெயம்

## பொருள் கண்டு கற்றல்

***இயேசுவின் இரத்தபலி நம்மை மீட்கிறது என்னும் கருத்தை ஒரு பொருள் கொண்டு கற்பியுங்கள்***

தேவையான பொருட்கள்: கூடோடு வேகவைத்த முட்டை ஒன்று, நிரந்தர கருப்பு மை பேனா. குழந்தைகள் கூடோடு வேகவைத்த முட்டையைத் தொட்டு பார்க்கட்டும்.



**பின் கேளுங்கள், உங்களில் யாரால் முதல் மனிதனும் மனுஷியும் என்ன தவறு செய்தார்கள் என்று கூற முடியும்?**

குந்தைகள் பதில் கூறக் கூற, சரியான பதில்களை மட்டும் முட்டைக் கூட்டின் மேல் நிரந்தர மை பேனாவால் எழுதுங்கள். ஒரு பதிலின் மேலேயே அடுத்த பதிலையும் எழுதுங்கள். முட்டை அழுக்காகத் தோன்றும்.

# பாடம் 15

**சில பதில்கள்:** முதல் மனிதனும் மனுஷியும் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள் தீய ஆவி கூறியதைக் கேட்டார்கள். முதல் மனிதனும் மனுஷியும் சிருஷ்டிகரான தேவன் செய்யக் கூடாது என்று கூறிய காரியத்தைச் செய்தார்கள்.

**விளக்கம்:** இந்த முட்டை, சிருஷ்டிகரான தேவனை நாம் அறிந்து கொள்வதற்கு முன்பு இருந்த நம் இருதயத்தைப் போன்றது. நாம் சிருஷ்டிகரான தேவனை அறிவதற்கு முன்னால், நம் இருதயம் முட்டையோடு போல் கடினமாக இருக்கிறது. சிருஷ்டிகரான தேவனை அறிவதற்கு முன்னால் நாம் தீய ஆவியின் பேச்சைக் கேட்கிறோம். சிருஷ்டிகரான தேவனின் சொல்லுக்குக் கீழ்ப்படிகிறதில்லை. சிருஷ்டிகரான தேவனை அறிவதற்கு முன் அவர் செய்யச் சொன்னதை நாம் செய்கிறதில்லை.

இயேசுவின் இரத்த பலி நம்மை மீட்கிறது

சிருஷ்டிகரான தேவனை அறிவதற்கு முன்னால், அவர் நம்மை எவ்வளவு நேசிக்கிறார், நம்மை மீட்டுக்கொள்ள என்ன செய்தார் என்பதை அறியாமல் இருந்தோம். சிருஷ்டிகரான தேவனை அறிவதற்கு முன்னால் இருளில் தொலைந்து மறைந்து இருந்தோம்.

இந்த முட்டை நம் ஒவ்வொருவருக்காகவும் சிருஷ்டிகரான தேவன் என்ன செய்தார் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது. (வேக வைத்த முட்டையின் ஓட்டை உடைத்து அகற்றுங்கள்)

சிருஷ்டிகரான தேவன் நாம் மனிதனுக்கு எதிராகவும், சிருஷ்டிகரான தேவனுக்கு எதிராகவும் சொல்லும், சிந்திக்கும், செய்யும் எல்லாத் தீய காரியங்களிலும் இருந்து நம்மை விடுவிக்கிறார். நான் முட்டையில் எழுதியுள்ள தீய காரியங்களை எப்படி அகற்றிப் போடுகிறேனோ, அதேபோல் இயேசுவும் நாம் சிருஷ்டிகரான தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராகச் சொல்லும், சிந்திக்கும், செய்யும் எல்லாத் தீய காரியங்களையும் எடுத்துப் போடுகிறார்.

சிருஷ்டிகரான தேவன் சிறுபாலகனாக நம்மை என்றென்றைக்கும் மீட்க வந்தார். அவர் பெயர் இயேசு. இயேசு உலகில் வாழ்ந்த பொழுது, சிருஷ்டிகரான தேவன் நம்மை எவ்வளவு நேசிக்கிறார், நாம் எப்படி வாழ விரும்புகிறார் என்பதைக் குறித்து மக்களிடம் பேசினார். ஆனால் இயேசு நமக்காக வாழ்ந்தது மட்டும் இல்லை, தம் உயிரையும் நமக்காகக் கொடுத்தார். நாம் அனைவரும் தீமையான காரியங்களைப் பேசுகிறபடியால், சிந்திக்கிறபடியால், செய்கிறபடியால் நமக்காக அவர் இறந்தார்.

இயேசு சிலுவையில் மரித்த பொழுது, நம்முடைய பாவங்களை எல்லாம் அவர் சுமந்தார். நாம் சிருஷ்டிகரான தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராகச் சொல்லும், செய்யும் சிந்திக்கும் தீய காரியங்களுக்காக நமது தண்டனையை அவர் ஏற்றார். ஆனால் அவர் மரித்தவராக இல்லை. மூன்று நாட்களுக்குப் பின் உயிரோடு எழும்பினார். இப்பொழுது பரலோகத்தில் வீற்றிருக்கிறார். அல்லேலூயா!

**இப்பொழுது முட்டை பார்ப்பதற்கும் தொடுவதற்கும் எப்படி இருக்கிறது?** சுத்தமாகவும், மெதுவாகவும் இருக்கிறது. நாமும் இயேசுவை விசுவாசித்து, அவர் யார், என்ன செய்தார் என்று அறிந்து கொண்டு, அவரது இலவசப் பரிசாம் இரத்த பலியை ஏற்றுக் கொள்ளும்பொழுது, நம் இருதயமும் இப்படி மாற்றம் அடைகிறது.

# பாடம் 15

## வேத வசன மனப்பாட விளையாட்டு

### *இயேசுவின் இரத்த பலி நம்மை மீட்கிறது என்று கற்பிக்கும் வேத வசனத்தை உபயோகியுங்கள்*

**யோவான் 3:16** *'ஆம்! தேவன் இவ்வுலகினைப் பெரிதும் நேசித்தார். எனவே தனது ஒரே குமாரனை இதற்குத் தந்தார். தேவன் தன் குமாரனைத் தந்ததால் அவரில் நம்பிக்கை வைக்கிற எவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனைப் பெறுவர்.'*

**என்னைப் பின்பற்றுங்கள்:** வேத வசனத்தைக் கூறியும், செய்கையுடன் செய்தும் காட்டுங்கள். குழந்தைகள் வசனத்தைச் செய்கையுடன் கற்றபின் உங்களுடன் சேர்ந்து செய்கை செய்யச் சொல்லுங்கள். உங்களைப் பார்க்காமல், தனியாக அவர்களே வசனத்தை செய்கையுடன் சொல்லும் வரை திரும்பத் திரும்பக் கற்றுக் கொடுங்கள்.

ஆம்! தேவன் இவ்வுலகினைப் (உருண்டைப் போல் செய்கை) பெரிதும் நேசித்தார் (மார்பின் மீது கைகள்) எனவே தனது ஒரே குமாரனை (இயேசு: ஒரு கையை மேலே உயர்த்துங்கள்) இதற்குத் தந்தார் (கொடுப்பது போல் செய்கை) தேவன் (கைகள் வானத்தை நோக்கி) தன் குமாரனைத் (ஒரு கையை மேலே உயர்த்தி) தந்ததால் (கொடுப்பது போல் செய்கை) அவரில் நம்பிக்கை வைக்கிற எவரும் (தலையையும், இருதயத்தையும் காட்டுங்கள்) கெட்டுப்போகாமல் (கண்களை சுழற்றுங்கள்) நித்திய ஜீவனைப் பெறுவர் (மேலே மேலே கைகளை வட்டமாக உயர்த்துங்கள்).

## நடைமுறை செயல்படுத்தல்

### *இயேசுவின் இரத்தபலி நம்மை மீட்கிறது என்று கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தல் ஒன்றை உபயோகப்படுத்துங்கள்*

இயேசுவின் இரத்த பலி நம்மை மீட்கிறது


சிருஷ்டிகரான தேவன் நம்மில் அன்புகூர்ந்து, இயேசுவின் வழியாக நாம் சிருஷ்டிகரான தேவனுக்கும் மனிதனுக்கும் எதிராகச் சொல்லும், சிந்திக்கும், செய்யும் எல்லாத் தீய காரியங்களிலுமிருந்து நம்மை மீட்டுக்கொண்டபடியால், நாம் என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் வாழலாம்! இயேசு நம்மை மீட்டுக்கொண்டபடியால் நாம் என்றென்றைக்கும் மன்னிக்கப்பட்டு விட்டோம். இயேசு நம்மை மீட்டுக்கொண்டபடியால், நாம் சிருஷ்டிகரான தேவனின் பார்வையில் என்றென்றைக்கும் சுத்தமாக இருக்கிறோம். இயேசு நம்மை மீட்டுக் கொண்டபடியால் நாம் என்றென்றைக்கும் சிருஷ்டிகரான தேவனின் பிள்ளைகள் அல்லேலூயா!

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே, நீர் என்னை நேசிப்பதற்காக உமக்கு நன்றி. நான் உம்மைக் குறித்தோ மற்றவர்களைக் குறித்தோ தீய காரியங்களைப் பேசினாலும் சிந்தித்தாலும், செய்தாலும் நீர் என்னை என்றென்றைக்கும் நேசிக்கிறீர். நான் உமக்கும் மற்றவர்களுக்கும் எதிராகச் சிந்திக்கும் சொல்லும் செய்யும் தீய காரியங்களிலிருந்து என்னை வந்து மீட்டுக்கொண்டதற்காக உமக்கு நன்றி.

சிருஷ்டிகரான தேவனே, நான் உம்மைக் குறித்தும், நீர் எனக்காகச் செய்த கிரியைகளைப் பற்றியும், ஒவ்வொரு நாளும் அதிகதிகமாக அறிய எனக்கு உதவி செய்யும். நான் உம்மை நம்பி விசுவாசிக்க எனக்கு உதவி செய்யும். நான் மற்றவர்களுக்கு உம்மைக் குறித்தும், உம் கிரியைகளையும் பற்றியும் கூற உதவி செய்யும்.

இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

# பாடம் 16



## ஒரு கருத்துப் பொருள்

***இயேசு என்னை என்றென்றுமுள்ள சதாகாலத்திற்கும் விடுவித்து இருக்கிறார்!***

இயேசு என்னை என்றென்றுமுள்ள சதாகாலத்திற்கும் விடுவித்து இருக்கிறார்!

## வேதாகமக் கதை

***இயேசு என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் என்னை விடுவித்திருக்கிறார் என்று கற்பிக்கும் கதையை உபயோகப்படுத்துங்கள்!***

**நற்செய்தி கதைப்புத்தகம் ஆறு. பக்கம் 36-40.** *இயேசு வாழ்கிறார்.*

**தேவையான பொருட்கள்:** வரைகிறதற்குக் கரும்பலகை மற்றும் சுண்ணாம்பு எழுதுகோல், அல்லது மண் மற்றும் குச்சி, அல்லது காகிதம் மற்றும் எழுதுகோல். குழந்தைகளுக்கு வரைபடக் காகிதம் அல்லது தாள், எழுதுகோல் மற்றும் அழிப்பான்.

கதையை வரைந்து கூறுங்கள். ஒவ்வொரு பக்கமும் வாசித்தபின் குழந்தைகளிடம் ஒரு கேள்வி கேளுங்கள்.

1, 2, 3 கதையைத் தொடங்கலாம்…



அநேக வருடங்கள் கழிந்தன. ஒரு மனுஷனை என்னால் பார்க்க முடிகிறது. அவன் பெயர் யோவான்.



யோவான் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, ‘இயேசுவை வானத்தில் என்னால் பார்க்க முடிகிறது. அவரது கண்கள் நெருப்பைப் போல் இருக்கின்றன!’ இயேசு வெண் குதிரையில் வருவதை என்னால் பார்க்க முடிகிறது. அவர் பெயர் தேவ வார்த்தை. இயேசுவின் ஆடையில் இவ்வார்த்தைகளை என்னால் பார்க்க முடிகிறது.ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர்! எல்லா குலத்து மக்களும் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது. எல்லா ஆவிகளும் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது. அனைத்தும் இயேசுவுக்குப் பாடுவதை என்னால் பார்க்க முடிகிறது.

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, ‘என் மக்கள் என்றென்றுமுள்ள சதாகாலமும் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். மரணம் இல்லை. கண்ணீர் இல்லை. துக்கம் இல்லை. வேதனை இல்லை. நான் எல்லாவற்றையும் புதிதாக்கிவிட்டேன்.’



இயேசு சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, ‘இதோ நான் மீண்டும் சீக்கிரம் வருவேன். நான் என்றென்றும் இருப்பவர். நான் இயேசு. நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களை என்றென்றுமுள்ள சதாகாலத்திற்கும் விடுவித்திருக்கிறேன்.’

**குழந்தைகளைக் கதையைப் படமாக வரையச் சொல்லுங்கள்.**


# பாடம் 16

இயேசு என்னை என்றென்றுமுள்ள சதாகாலத்திற்கும் விடுவித்து இருக்கிறார்!

**குழந்தைகள் கதை கூறுதல்:** ஒவ்வொரு குழந்தைக்கும் 1, 2, 1, 2, 1, 2 என்ற ஒன்று விட்ட எண்கள் கொடுக்கப்பட வேண்டும். ஒரு 1ம் எண் கொண்ட குழந்தை, ஒரு 2ம் எண் கொண்ட குழந்தையும் ஜோடி சேர்க்கப்பட வேண்டும். 1ம் எண் கொண்ட ஒவ்வொரு குழந்தையும் தன்னுடன் ஜோடிசேர்க்கப்பட்ட 2ம் எண் குழந்தையிடம் ஆசிரியர் கூறிய கதையை மறுபடியும் கூற வேண்டும். அவர்கள் கூறி முடித்த பின், 2ம் எண் கொண்ட குழந்தை, தன்னுடைய ஜோடியான 1ம் எண் குழந்தையிடம் மறுபடியும் அக்கதையைக் கூற வேண்டும். இப்படி அனைவரும் முடித்த பின், ஒரு குழுவாக மறுபடியும் ஒன்று கூட வேண்டும்.

## செய்கைப் பாடல்

***இயேசு என்றென்றைக்கும் சதாகாலத்திற்கும் என்னை விடுவித்து இருக்கிறார் என்று கற்பிக்கும் செய்கைப் பாடல் ஒன்றை கற்றுக்கொடுங்கள்!***




கொண்டாடுவோம் கொண்டாடுவோம் } 2
கர்த்தரின் ஜெயம் கொண்டாடுவோம்
கர்த்தர் மகத்துவங்களைச் செய்தார் – (3)
கரத்தரின் ஜெயம் கொண்டாம் - (2)

## பொருள் கண்டு கற்றல்

***இயேசு என்னை என்றென்றைக்கும் சதாகாலங்களுக்கும் விடுவித்து இருக்கிறார் என்று கற்பிக்கும் ஒரு பொருளை உபயோகியுங்கள்!***

**தேவையான பொருட்கள்:** எழுதும் கற்பலகை மற்றும் சிவப்புச் சுண்ணாம்பு எழுதுகோல் (சிவப்பு நிறம் கிடைக்காவிடில் வெள்ளைச் சுண்ணாம்பு எழுதுகோல்)

கற்பலகை நம் இருளடைந்த இருதயம் போன்றது என்று குழந்தைகளுக்கு விளக்குங்கள். இது நாம் சிருஷ்டிகரான தேவனுக்கும், பிற மக்களுக்கும் எதிராகச் சொல்லும், சிந்திக்கும் செய்யும், தீய செயல்களைப் போன்றது.

இப்பொழுது கவனியுங்கள். சுண்ணாம்பைக் கொண்டு கற்பலகை முழுவதும் வண்ணம் பூசுங்கள்.

இது இயேசுவின் இரத்த பலி போன்றது. இயேசுவின் இரத்தம் தீயச் செயல்கள் எல்லாவற்றையும் மூடி மறைத்துவிட்டது. இயேசு செய்ததை ஒருவராலும் மாற்றிப் போட முடியாது. அவர் இரத்தபலியாக தம்மைத் தந்ததால், நீங்கள் என்றென்றைக்கும் அவருக்குள் மூடப்பட்டிருக்கிறீர்கள். இயேசுவே என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் ஜீவிக்கிறவர். ஆகையால் அவரே நம்மை என்றென்றைக்கும் சதாகாலங்களுக்கும் விடுவித்து இருக்கிறார்.

# பாடம் 16

## வேத வசன மனப்பாட விளையாட்டு

***இயேசு என்றென்றைக்கும் சதாகாலங்களுக்கும் என்னை விடுவித்திருக்கிறார் என்று கற்பிக்கும் வசனத்தைக் கற்றுக் கொடுங்கள்!***

*கர்த்தர் என்பது சிருஷ்டிகரான தேவனின் மற்றொரு நாமம் என்று விளக்குங்கள்.*

**வெளிப்படுத்தின விசேஷம் 1:18** *"'நான் வாழ்கிற ஒருவராக இருக்கிறேன். நான் இறந்தேன். ஆனால் இப்போது சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறேன். என்னிடம் மரணத்துக்கும், பாதாளத்துக்கும் உரிய திறவுகோல்கள் உள்ளன.'"*

ஞாபகப்படுத்துங்கள்: எல்லாக் குழந்தைகளையும் மூன்று அணிகளாகப் பிரித்து, அவர்களைக் குள்ளமான குழந்தை முதலாவதாகவும், வளர்த்தியான குழந்தை கடைசியில் என மூன்று வரிசைகளாக நிற்க வையுங்கள்.

'நான் வாழ்கிற ஒருவராக இருக்கிறேன்.' என்ற வரியை நீங்கள் 1ஆம் வரிசையில் நிற்கும் முதல் குழந்தையின் காதுகேட்க மட்டும் கூற வேண்டும். அதை அக்குழந்தையின் காதில் சொல்ல வேண்டும். அவர்கள் கேட்டதை அடுத்த குழந்தையிடம் கூற வேண்டும். இப்படியாக வரிசையின் கடைசிக் குழந்தை வரை அவ்வரியைக் கூற வேண்டும்.

பின் 2ஆம் வரிசையின் முதல் குழந்தையிடம், 'நான் இறந்தேன். ஆனால் இப்போது சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறேன்.' என்ற வரியைக் கூறி, அடுத்த குழந்தையின் காதில் கூறச் சொல்லச் சொல்லுங்கள். தான் கேட்டதை, அக்குழந்தை அடுத்த குழந்தையிடம் கூற வேண்டும். இப்படியாக கடைசிக் குழந்தை வரை சொல்ல வேண்டும்.

பின் 3 ஆம் அணியின் முதல் குழந்தையிடம், 'என்னிடம் மரணத்துக்கும், பாதாளத்துக்கும் உரிய திறவுகோல்கள் உள்ளன.' என்ற வரியைக் காதில் கூறி, அடுத்த குழந்தையின் காதில் கூறச் சொல்லுங்கள். தான் கேட்டதை அடுத்த குழந்தையிடம் கூற வேண்டும். இப்படியாக, கடைசிக் குழந்தை வரை கூற வேண்டும்.

இயேசு என்னை என்றென்றுமுள்ள சதாகாலத்திற்கும் விடுவித்து இருக்கிறார்!

பின் 1 ஆம் வரிசையின் கடைசிக் குழந்தையை முன்னழைத்து தான் கேட்டதைச் சத்தமாக கூறச் சொல்லுங்கள். முதல் வரிசையினரிடம் அது சரியா? என்று கேளுங்கள். சரி என்றால் அவர்கள் அணிக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள். இல்லையென்றால் மதிப்பெண் கிடையாது. சரியான வரியை அனைத்துக் குழந்தைகளுக்கும் கூறுங்கள்.

பின் 2 ஆம் வரிசையின் கடைசிக் குழந்தையை அழைத்து, தான் கேட்டதைச் சத்தமாகக் கூறச் சொல்லுங்கள். இரண்டாம் வரிசையினரிடம் அது சரியா? என்று கேளுங்கள். சரி என்றால் ஒரு மதிப்பெண் கொடுங்கள். இல்லை என்றால் மதிப்பெண் கிடையாது. சரியான வார்த்தைகளை அனைவரும் கேட்கும்படி கூறுங்கள்.

பின் 3 ஆம் வரிசையின் கடைசிக் குழந்தையை முன்னழைத்து, தான் கேட்டதைச் சத்தமாகக் கூறச் சொல்லுங்கள். மூன்றாம் வரிசையினரிடம் அது சரியா? என்று கேளுங்கள். சரி என்றால் ஒரு மதிப்பெண் அவ்வணிக்குக் கொடுங்கள். இல்லை என்றால் மதிப்பெண் கிடையாது. சரியான வார்த்தைகளை அனைவரும் கேட்கும்படி கூறுங்கள்.

# பாடம் 16

1 ஆம் வரிசையின் எல்லா குழந்தைகளும் சேர்ந்து, 'நான் வாழ்கிற ஒருவராக இருக்கிறேன்.' என்று கூற வேண்டும்.

2 ஆம் வரிசையினர் அனைவரும் சேர்ந்து, *'நான் இறந்தேன். ஆனால் இப்போது சதாகாலங்களிலும் உயிரோடு இருக்கிறேன்.'* என்று கூற வேண்டும்.

3 ஆம் வரிசையினர் அனைவரும் சேர்ந்து, *'என்னிடம் மரணத்துக்கும், பாதாளத்துக்கும் உரிய திறவுகோல்கள் உள்ளன.'* என்று கூற வேண்டும்.

## நடைமுறை செயல்படுத்தல்

இயேசு என்னை என்றென்றுமுள்ள சதாகாலத்திற்கும் விடுவித்து இருக்கிறார்!


***இயேசு என்றென்றைக்கும் சதாகாலங்களுக்கும் என்னை விடுவித்து இருக்கிறார் என்று கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தல் ஒன்றை உபயோகப்படுத்துங்கள்!***

இயேசு என்றென்றும் சதாகாலங்களிலும் வாழ்கிறார் என்பது நாம் என்றென்றைக்கும் சதாகாலங்களுக்கும் விடுவிக்கப்பட்டு விட்டோம் என்று விளக்குகிறது. இயேசு மறுபடியும் வருவார், நாம் அவருடன் என்றென்றைக்கும் சதாகாலங்களும் வாழ்வோம் என்று அறிந்து, இவ்வுலகில் இப்போது வாழலாம். இயேசு எல்லாவற்றையும் புதிதாக்கிவிட்டார். இனி சாவில்லை. கண்ணீரில்லை. துயரமில்லை. பசியில்லை. அல்லேலூயா!

**ஜெபம்:** ஒரு குழந்தையை ஜெபிக்கச் சொல்லுங்கள்.

**பரிசு:** ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்களது பிரதி *நற்செய்தி கதைப்புத்தகம் ஆறை* கொடுங்கள். ஒவ்வொரு குழந்தையும் அவர்களது *நற்செய்தி கதைப்புத்தகம் ஆறை* வாசிக்க உதவி செய்யுங்கள்.

# பாடத் திட்டம்


வேதாகமக் கதைகளைக் கொண்டு பாடங்களை நீங்களே தயாரிக்கலாம்.

ஒவ்வொரு பாடத்திலும் எவ்வளவு விளக்கவுரைகளைப் பயன்படுத்துவது என்பது குழந்தைகளோடு செலவிட உங்களுக்குக் கிடைக்கும் நேரத்தைக் கொண்டு அமையும். ஒவ்வொரு பாடத்திலும் நீங்கள் கற்பிக்கத் தேர்ந்தெடுத்த கருத்தை விளக்கும் கதை, செய்கைப் பாடல் மற்றும் நடைமுறைச் செயல்பாடு கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.

1: நீங்கள் ஊழியம் செய்யும் குழந்தைகளுக்காக ஜெபம் பண்ணுங்கள். தேவன் அவர்கள் இருதயங்களைத் தகுதிப்படுத்தவும், உங்கள் இருதயம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள். ஒவ்வொரு பாடத்திற்கும் எந்த வேதாகமக் கதையைக் கற்பிக்க வேண்டும் என்று தேவன் உங்களை வழிநடத்த ஜெபியுங்கள்.

2: வேதாகமக் கதையை நன்கு நினைவில் கொள்ளும்வரை திரும்பத் திரும்ப வாசித்துப் பாருங்கள்.

3: குழந்தைகள் மகிழ்ச்சியாக அனுபவிக்கத்தக்கதாக, கதையை எளிய, வேடிக்கையான வகையில் சொல்ல நன்கு பழகிக் கொள்ளுங்கள்.

4: நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் வேதாகமக் கதைக்கு ஏற்ற எந்த கருத்துப் பொருளை உபயோகிக்க வேண்டும் என்று முடிவெடுத்துக் கொள்ளுங்கள்.

5: நீங்கள் எப்படி குழந்தைகளையும் உட்படுத்தி, கதையைச் சொல்லலாம் என்று யோசித்து வையுங்கள். *எடுத்துக் காட்டு:* கதையை நடித்துக் காட்டலாம், வரைந்து கதை சொல்லலாம், குழந்தைகள் கதையை நடிக்கலாம், குழந்தைகள் கதையில் வரும் சத்தங்களை அல்லது செய்கைகளைச் செய்யலாம், கதையில் வரும் வார்த்தைகளை உங்கள் பின் திரும்பக் கூறலாம்.


6: கதையின் கருத்தைக் கற்பிக்கும் செய்கைப் பாடல் ஒன்றைக் கற்றுக் கொடுங்கள். அக்கருத்தைக் கற்பிக்கும் செய்கைப் பாடலை அறிந்திராவிடில், நீங்களே எளிதான வார்த்தைகளோடும். செய்கைகளோடும் தெரிந்த ராகத்தில் ஒரு பாடலை எழுதுங்கள்.

7: இந்த ஒரு கருத்துப் பொருள் எப்படி நம் வாழ்வில் உபயோகப்படுகிறது என்று கற்றுக்கொடுங்கள்.

8: மேலும் நேரம் இருந்தால் இந்த வழிகாட்டியில் கொடுக்கபட்டுள்ளபடி அல்லது நீங்கள் அறிந்த வேறு முறையில் வேதாகம வசனப் போட்டி மற்றும் / அல்லது பொருள் கண்டு கற்றலையும் அன்றையப் பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

9: நீங்கள் பாடத்தை நன்கு நடத்துங்கள். தேவன் உங்கள் இருதயத்திலும் குழந்தைகளின் இருதயங்களிலும் கிரியை செய்வாராக. எல்லாவற்றிற்கும் மேலாக, நீங்கள் குழந்தைகளோடு செலவிடும் நேரத்தை குழந்தைகளுக்கும் உங்களுக்கும் மகிழ்ச்சியானதாக ஆக்குங்கள்.

# ஜெபம்





எபேசியர் 3:16-19 *'அவரிடத்தில் இருந்து பரலோகத்திலும், பூமியிலும் உள்ள எல்லாக் குடும்பங்களும் தம் உண்மையான பெயரைப் பெறும் உங்கள் ஆவிக்குள் நீங்கள் வல்லமையுடைவர்களாக இருக்க விரும்புகிறேன். நான் பிதாவை அவரது உயர்ந்த மகிமையின் நிமித்தம் கேட்கிறேன். அவர் தமது ஆவியின் மூலமாக அந்த வல்லமையைத் தருவார். கிறிஸ்து உங்கள் இதயத்தில் விசுவாசத்தின் மூலம் வாழ நான் பிரார்த்தனை செய்கிறேன். உங்கள் வாழ்க்கை அன்பால் கட்டப்படவும், அன்பில் வல்லமையாக இருக்கவும் நான் பிரார்த்தனை செய்கிறேன்.*

*நீங்களும் தேவனின் பரிசுத்தமான மக்களும் உயர்ந்த கிறிஸ்துவின் அன்பைப் புரிந்துக்கொள்ளும் சக்தியைப் பெறவேண்டும். அவரது அன்பு எவ்வளவு அகலமானது, எவ்வளவு நீளமானது, எவ்வளவு உயரமானது, எவ்வளவு ஆழமானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் பிரார்த்தனை செய்கிறேன்.'*

